**செப்டம்பர் – 10**

# TNPSC துளிகள்

- திரிபுராவின் ஜம்புய் மலைகளில் 'அமோலோப்ஸ் அம்மாச்சி' என்ற புதிய தவளை இனம் கண்டுபிடிக்கப்பட்டு, 'இந்தியாவின் தவளை மனிதர்' என்று அழைக்கப்படும் டெல்லி பல்கலைக்கழகத்தின் எஸ். டி. பிஜு தலைமையிலான குழுவால் பத்மினி வர்க்கி (அம்மாச்சி) நினைவாக பெயரிடப்பட்டுள்ளது.
  - அமோலோப்ஸ் அம்மாச்சி என்பது அமோலோப்ஸ் என்ற அடுக்குத் தவளைப் பேரினத்தைச் சேர்ந்ததாகும்.
- இந்திய தொழில்நுட்பக் கழகம் மெட்ராஷின் ஆதரவு பெற்ற போதன் AI நிறுவனம், AI4Bharat அமைப்புடன் இணைந்து இந்திய மொழிகளுக்கான நான்கு open-weight செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இந்த மாதிரிகள் குரல் அங்கீகாரம், குரல் உருவாக்கம், இயந்திர மொழிபெயர்ப்பு மற்றும் ஒளியியல் எழுத்து அடையாளம் காணல் (OCR) ஆகியவற்றை உள்ளடக்கியவை ஆகும்.
- மகாராஷ்டிராவின் கோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள புசவாடே கிராமத்தில் 'கெஜீனியோஃபிஸ் சந்த்காடி' என்ற புதிய கால்களற்ற இருவாழ்வி (சீசீலியன்) கண்டு பிடிக்கப் பட்டது; இது கெஜீனியோஃபிஸ் பேரினத்தைச் சேர்ந்தது.
  - இப்பிராந்தியத்தில் பேசப்படும் மராத்தியின் சந்த்காடி பேச்சுவழக்கின் பெயரால் இதற்குப் பெயரிடப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற 6வது சர்வதேச பருவநிலை உச்சி மாநாட்டில் (ICS-2026) இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான பாதுகாப்பு தளமான 'அக்னி கவாச்' அறிமுகப்படுத்தப்பட்டது.
  - இத்தளம் தொழில்துறை பாதுகாப்பு நடைமுறைகளுக்கு ஆதரவளிக்கவும், தொழில்துறை பாதுகாப்பை வலுப்படுத்தவும் மற்றும் உலகளாவிய தொழில்துறை பாதுகாப்பு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கவும் AI-ஐப் பயன்படுத்துகிறது.
- ஹைதராபாத்தைச் சேர்ந்த அப்போலியன் டைனமிக்ஸ் நிறுவனம், மணிக்கு 498 கி.மீ சான்றளிக்கப்பட்ட அதிகபட்ச வேகத்துடன் கூடிய இந்தியாவின் அதிவேக பல சுழலி (multirotor) ஆளில்லா வான்வழி வாகனமான (UAV) 'ஆஹுதி மார்க் II'-ஐ உருவாக்கியுள்ளது.
  - ஆஹுதி மார்க் II என்பது எதிரிகளின் ஆளில்லா விமானங்கள் மற்றும் சுற்றும் வெடிமருந்துகளைத் துரத்திச் சென்று அழிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு மின்சார இடைமறிப்பு ஆளில்லா விமானமாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு உப்பு குறைப்பு திட்டம்

- பொதுமக்கள் உப்பு உட்கொள்வதைக் குறைப்பதற்காக தமிழ்நாடு அரசு மாநில அளவிலான திட்டத்தை அறிவித்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) தினமும் 5 கிராமுக்கு குறைவாக உப்பு உட்கொள்ளப் பரிந்துரைக்கிறது, அதே வேளையில் தமிழ்நாட்டின் சராசரி நுகர்வு 7-8 கிராம்களாக உள்ளது.
- தென்னிந்திய உணவில் உட்கொள்ளப்படும் உப்பில் சுமார் 88% வீட்டில் சமைக்கும்

போது சேர்க்கப்படும் உப்பில் இருந்தே கிடைக்கிறது.

- ❖ மாநிலம் தழுவிய சிறுநீர் மாதிரி கணக்கெடுப்பு மூலம் உப்பு நுகர்வு அளவிடப்படும், அதே வேளையில் அரசு சமையலறைகளில் உப்பின் பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தரநிலைகள் பின்பற்றப்படும்.
- ❖ குறைந்த சோடியம் கொண்ட உப்பு மாற்றீடுகளை அரசு ஆய்வு செய்யும் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் சுகாதார நல மையங்கள் மூலம் உப்பு குறைப்பு ஆலோசனைகளை வழங்கும்.




## தமிழ்நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரி விவரம்




- ❖ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BCs), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBCs) மற்றும் சீர்மரபினர் (DNCs) ஆகியோரை கணக்கெடுப்பதற்கான 'திறந்த பத்தி முறையை' (Open-Column Method) நீக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியது.
- ❖ சாதித் தரவுகள் சேகரிப்பிற்காக, 2027 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பு இணைய தளத்தில் அறிவிக்கப்பட்ட BC, MBC மற்றும் DNC பட்டியல்களை முன்-பதிவேற்றம் செய்யுமாறு இத்தீர்மானம் மத்திய அரசை வலியுறுத்தியது.

- பட்டியலிடப்பட்ட சாதியினர் (SCs) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (STs) கணக்கெடுக்கப்படுவது போலவே BC, MBC மற்றும் DNC மக்களையும் கணக்கெடுக்க வேண்டும் என்றும், பதிலளிப்பவர்கள் தங்களின் சாதியை தாங்களே சுய பிரகடனம் செய்ய அனுமதிப்பதற்குப் பதிலாக இம்முறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் கோரியது.
- சுதந்திரத்திற்குப் பிந்தைய மக்கள் தொகை கணக்கெடுப்புகளில் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் (OBCs) சாதி விவரங்கள் விடுக்கப்பட்டதால், துல்லியமான சாதி வாரித் தரவுகள் தேவை என்று இத்தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டு உள்ளது.

## நீதிபதி கோகுல்தாஸ் ஆணைய அறிக்கை

- 2024 ஆம் ஆண்டில் நடந்த கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விபத்து தொடர்பான நீதிபதி பி. கோகுல்தாஸ் ஆணையத்தின் அறிக்கை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.
- மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் புழக்கத்திற்கு வரக் காரணமான காவல்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளின் அலட்சியமே காரணம் என ஆணையம் குற்றம் சாட்டியுள்ளது.
- சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும், கள்ளச் சாராயத்தின் முக்கிய ஆதாரமாக அடையாளம் காணப்பட்ட கல்வராயன் மலைப் பகுதிக்கு தனி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை உருவாக்கவும் பரிந்துரைத்துள்ளது.
- இந்த துயரச் சம்பவத்தால் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு கல்வி, உணவு மற்றும் இருப்பிடம் வழங்கவும், கல்வி முடித்த பின் அரசு வேலை வழங்கவும் அறிக்கை பரிந்துரை செய்துள்ளது.
- வேலைவாய்ப்பை வழங்குவதற்காக கள்ளக்குறிச்சியில் தொழிற்சாலைகளை அமைக்கவும், கரியாலூர் காவல் நிலையத்தை தரம் உயர்த்தவும் பரிந்துரைத்தது.




## தமிழ்நாடு சட்டப்பேரவையில் 11 மசோதாக்கள் நிறைவேற்றம்

- தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 அன்று நகர ஊரமைப்பு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான சட்டத் திருத்தங்கள் உட்பட 11 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.
- தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) மசோதா, 2026 ஆனது, குறைந்தபட்ச நிலத் தேவையை பெருநகர சென்னை மாநகராட்சியில் 100

ஏக்கரிலிருந்து 12 ஏக்கராகவும், பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 18 ஏக்கராகவும், பிற பகுதிகளில் 25 ஏக்கராகவும் குறைக்கிறது.

- மேலும் இது நிரந்தர வைப்பு நிதியை ₹50 கோடியிலிருந்து ₹25 கோடியாகக் குறைக்கிறது.
- தமிழ்நாடு நகர ஊரமைப்பு (திருத்தச்) மசோதா, 2026 ஆனது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்குப் பதிலாக நகர வளர்ச்சி குழுமங்களுக்கு முழுநேரத் தலைவரை நியமிக்க வகை செய்கிறது.
- வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் மசோதா, 2026 ஆனது, வியாபாரிகளின் மண்டி உரிமச் செல்லுபடியாகும் காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்துகிறது மற்றும் உரிம விண்ணப்பங்களை இணைய வழியாக்குகிறது.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், ஊராட்சிகள், வணிக வசதியாக்கம், மதிப்புக்கூட்டப்பட்ட வரி (VAT) மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஆகியவற்றிற்கான TNPSC நியமனங்கள் தொடர்பான திருத்தங்களுக்கும் பேரவை ஒப்புதல் அளித்தது.




# தேசியச் செய்திகள்

## பயோடெக் முதலீட்டுத் தளம்

- உயிரிதொழில்நுட்பவியல் (பயோடெக்) புத்தொழில் நிறுவனங்களை முதலீட்டாளர்களுடன் இணைப்பதற்காக 'பயோ-நிவேஷ்' (BIO-NIVESH) என்ற தளத்தை மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.
- வணிகமயமாக்கலுக்கும் விரிவுபடுத்தலுக்கும் தயார் நிலையில் உள்ள உயிரி தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளில் தனியார் முதலீட்டை அதிகரிப்பதை இந்தத் தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் முதல் பதிப்பு 20 உயிரிதொழில்நுட்ப மற்றும் ஆழ்தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களையும் சுமார் 50 முதலீட்டாளர்களையும் ஒன்றிணைத்தது.
- ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் கண்டுபிடிப்பு (RDI) நிதியம் ₹1 லட்சம் கோடி நிதி ஒதுக்கீட்டைக் கொண்டுள்ளது, இதில் உயிரிதொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளுக்கான இரண்டாம் நிலை நிதி மேலாளராக உயிரிதொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவி சபை (BIRAC) செயல்படுகிறது.
- பிராந்திய உயிரிதொழில்நுட்பச் சுற்றுச்சூழல் அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக,

எதிர்கால பதிப்புகளை வெவ்வேறு நகரங்களில் நடத்துவதற்கான ஒரு தொடர்ச்சியான தளமாக இந்த முயற்சி திட்டமிடப்பட்டுள்ளது.




## அந்தமான் நிக்கோபாரில் சிறிய வகை அணு உலைகள்




- பாபா அணு ஆராய்ச்சி மையமானது (BARC) 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 முதல் 8 ஆம் தேதி வரை அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் சிறிய வகை அணு உலைகளை (SMRs) அமைப்பதற்கான இடங்களை ஆய்வு செய்து வருகிறது.
- இந்த மதிப்பீடானது ஒன்றியப் பிரதேசத்தின் வடக்கு மற்றும் மத்திய அந்தமான், தெற்கு அந்தமான் மற்றும் நிக்கோபார் ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியது.
- பன்னாட்டு கொள்கலன் மாற்று முனையம் (ICTT), புதிய விமான நிலையம் மற்றும் பிற உள்கட்டமைப்புகள் உள்ளிட்ட கிரேட் நிக்கோபார் திட்டத்திலிருந்து அதிகரிக்கும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய இந்த சிறிய வகை அணு உலைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.
- இத்தீவுகள் தற்போது முக்கியமாக டீசல் அடிப்படையிலான மின் உற்பத்தியையே சார்ந்துள்ளன, இதனால் எதிர்கால வளர்ச்சிக்கு நம்பகமான உள்ளூர் மின்சாரம் முக்கியமானதாக அமைகிறது.

- மலாக்கா நீர்ச்சந்தி மற்றும் முக்கிய கடல்சார் பாதைகளுக்கு அருகில் அமைந்துள்ளதால் கிரேட் நிக்கோபார் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## G20 புத்தாக்க அமைச்சர்கள் கூட்டம் 2026

- G20 புத்தாக்க அமைச்சர்கள் கூட்டமானது 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் அமெரிக்காவின் வட கரோலினாவில் உள்ள சாப்பல் ஹில்லில் நடைபெற்றது.
- கண்டுபிடிப்புக்கு சாதகமான கொள்கைகள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், திறமையான பணியாளர்கள், செயற்கை நுண்ணறிவு (AI), அறிவுசார் சொத்துரிமை (IP) மற்றும் தொழில்துறை கண்டுபிடிப்புகள் உட்பட ஆறு பகுதிகளை உள்ளடக்கிய புத்தாக்க அமைச்சர்களின் அறிக்கையை G20 அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டனர்.
- இக்கூட்டத்தில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான கரோலினா கோட்பாடுகள், செயற்கை நுண்ணறிவு செழிப்பு இலக்குகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு செழிப்பு ஒப்பந்தம் ஆகியவற்றில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது.
- AI, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், குறைக்கடத்திகள், டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI) மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், ஜெர்மனி, ஆப்பிரிக்க ஒன்றியம் மற்றும் அமெரிக்காவுடனான ஒத்துழைப்பு குறித்து இந்தியா விவாதித்தது.
- இக்கூட்டம் AI, குறைக்கடத்திகள், ரோபாட்டிக்ஸ், டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பை வலியுறுத்தியது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அஜர்பைஜானில் ஐ.நா பருவநிலை வாரம்

- COP31 மாநாட்டிற்கு முன்னதாக, நான்காவது ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை வாரம் அஜர்பைஜானின் பாகு நகரில் தொடங்கியது.
- பருவநிலை நடவடிக்கை, நிதி, தகவமைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து விவாதிக்க இந்த கூட்டம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 முதல் 11 ஆம் தேதி வரை நடத்தப் படுகிறது.

- பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை கட்டமைப்பின் மீதான விவாதங்கள் உமிழ்வுகள், தகவமைப்பு மற்றும் பருவநிலை ஆதரவு குறித்த அறிக்கையிடலில் கவனம் செலுத்துகின்றன.
- COP29 (அஜர்பைஜான்), COP30 (பிரேசில்) மற்றும் COP31 (துருக்கியே) ஆகிய மாநாடுகளின் தலைமைத்துவ அமைப்புகள் இந்த உரையாடலில் பங்கேற்கின்றன.
- கார்பன் சந்தைகள், நியாயமான மாற்றம், தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs), தகவமைப்பு மற்றும் பருவநிலை நிதி ஆகியவை முக்கிய விவாதப் பொருள்களாகும்.
- 2026 ஆம் ஆண்டின் பாகு பருவநிலை நடவடிக்கை வாரமானது, ஐ.நா பருவநிலை வாரத்துடன் இணைந்து நடத்தப்பட்டு, முதலீட்டாளர்கள், வணிகங்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்களை ஒன்றிணைக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## பூஜ்ஜிய மரபுசார் கழிவு - மத்தியப் பிரதேசம்

- 'ஸ்வச் ஷஹர் ஜோடி' (Swachh Shehar Jodi) திட்டத்தின் கீழ் மத்தியப் பிரதேசத்தில் உள்ள தேபால்பூர், 1,250 மெட்ரிக் டன் மரபு சார்ந்த கழிவுகளை சுத்திகரித்து 'பூஜ்ஜிய மரபுசார் கழிவு' (Zero Legacy Waste) நிலையை எட்டிய முதல் நகரமாக மாறியுள்ளது.
- இந்த முயற்சி ஸ்வச் பாரத் திட்டம்-நகர்ப்புறம் 2.0-இன் (SBM-U 2.0) கீழ் இந்தூர் மாநகராட்சியின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டது.
- தேபால்பூர் நகரம் கழிவுகளை நான்கு பிரிவுகளாகப் பிரித்து 100% வீடு வீடாகச் சென்று கழிவுகளை சேகரிக்கும் முறையை அடைந்துள்ளது.
- சுமார் 4.5 டன் நெகிழிப் பொருட்கள், உலோகம் மற்றும் கண்ணாடி ஆகியவை மீட்கப் பட்டு அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டன.

- சிமெண்ட் தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்காக சுமார் 50-60 டன் கழிவில் இருந்து பெறப்பட்ட எரிபொருள் (RDF) இந்தூரில் உள்ள நெப்ரா (NEPRA) ஆலைக்கு அனுப்பப் பட்டது.
- இந்தூர் நகரைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் இந்தக் கழிவுச் சீரமைப்புப் பணியில் பங்கேற்றனர்.




## கிராமப்புற கழிவு மேலாண்மை




- அசாமின் மஜுலி மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் ஆகிய மாவட்டங்கள் கிராமப்புறக் கழிவுகளை மேலாண்மை செய்வதற்கான சமூகம் சார்ந்த மாதிரிகளை உருவாக்கியுள்ளன.
- மஜுலியில், 20 ஊராட்சிகளில் 19 ஊராட்சிகளில் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, மத்தியப் பொருள் சேகரிப்பு மையங்களில் (CMCFs) தரம் பிரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்பவர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

- 2024 ஆம் ஆண்டு முதல், மஜுலி 82.4 டன் கழிவுகளை சேகரித்து, அவை பிரம்மபுத்திரா நதியிலும் கடலிலும் கலப்பதைத் தடுத்துள்ளது.
- தவாங்கில், கிராம மக்கள் மாதந்தோறும் 'ஸ்வச்சதா திவாஸ்' (தூய்மை தினம்) நடத்தி, கழிவுகளை 22 பிரிவுகளாகப் பிரித்து பொருள் மீட்பு மையங்களுக்கு (MRFs) அனுப்புகின்றனர்.
- 26 கிராமங்கள் 30 டன் கழிவுகளைச் சேகரித்துள்ளன, அதில் 20 டன்னுக்கும் அதிகமான கழிவுகள் மறுசுழற்சியாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு ₹3.53 லட்சம் வருவாய் ஈட்டப் பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச எழுத்தறிவு தினம் 2026 - செப்டம்பர் 08

- சர்வதேச எழுத்தறிவு தினத்தின் 60வது ஆண்டு விழா 2026 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் படுகிறது, இதற்கான உலகளாவியக் கொண்டாட்டத்தை மெக்சிகோ நடத்துகிறது.
- எழுத்தறிவின்மையை ஒழிப்பது தொடர்பான 1965 ஆம் ஆண்டு தெஹ்ரான் மாநாட்டைத் தொடர்ந்து, 1966 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ தனது 14வது பொது மாநாட்டின் போது சர்வதேச எழுத்தறிவு தினத்தைப் பிரகடனப்படுத்தியது.
- இதன் முதல் அனுசரிப்பு 1967 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது, அதே ஆண்டில் ஐ.நா பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) இந்த அனுசரிப்புக்கு ஒப்புதல் அளித்தது.
- யுனெஸ்கோவின் சர்வதேச எழுத்தறிவு பரிசுகளில் 'அரசர் செஜோங் எழுத்தறிவு பரிசு' மற்றும் 'கான்பியூசியஸ் எழுத்தறிவு பரிசு' ஆகியவை அடங்கும், இதில் ஆண்டுதோறும் ஆறு விருதுகள் வழங்கப்படுகின்றன.
- இந்தியாவில், உல்லாஸ் (ULLAS) திட்டமானது டிஜிட்டல் எழுத்தறிவு, நிதி எழுத்தறிவு, வாழ்க்கை திறன்கள் மற்றும் வாழ்நாள் கற்றல் ஆகியவற்றுடன் வயதுவந்தோர் எழுத்தறிவையும் ஊக்குவிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Literacy for people, the planet and prosperity என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★